RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt22s632

OPEN ACCESS

# எட்டுத்தொகை நூல்களில் பண்பாட்டு மரபியல்

மு. செல்வக்குமார் [அ, *]

[அ] தமிழ்த்துறை, தியாகராசர் கல்லூரி, மதுரை-625009, தமிழ்நாடு, இந்தியா.

# Cultural Genetics in Ettutthokai (Eight Anthologies)

**M. Selvakumar [a, *]**

[a] Department of Tamil, Thiagarajar College, Madurai-625009, Tamil Nadu, India

* Corresponding Author:
Selvakumarncc82@gmail.com

Received: 02-10-2021
Revised: 26-04-2022
Accepted: 08-04-2022
Published: 30-07-2022

Check for updates

## ABSTRACT

The term "Culture" was coined at a later stage. This terminology is found in the Sangam literature in terms such as attributive, worthy men, ill-mannered, etc. It was in Tamil Nadu that the Tamil people, the primitive people, originated. It is the unanimous decision of historians that the human race originated. It was the Tamils who emerged in the early times and attained the maturity of civilization and the knowledge of life that led them to become the greatest in culture. Therefore, it can be realised that the Tamil race was the race that brought civilization and culture to the world and trained them. There are certain unique features and characteristics of such a Tamil race. Tolkappiyam and Sangam's works of literature are considered to be the oldest books available to us today. It is divided into internal and external parts. Also, it can be seen that the concept of cultural genetics refers to the lifestyles of people. Culture can be defined as the absorption of traditional customs and rituals of the people. Through its poetry, the Etthutthokai has captured the cultures of the ancient peoples. Following a good culture, it becomes an ideal platform for people to achieve higher goals in their lives. The purpose of this study is to investigate how the modern cultural genealogy of the ancient peoples is aligned with today's texts and the current status of cultural traditions by befitting the culture of ancient people.

**Keywords:** Ancient Tamil People, Eight Anthologies, Cultural Traditions, Civilization

## முன்னுரை

பண்பாடு எனும் சொல் பிற்காலத்தில் உருவாக்கப்பட்டது. இச்சொல்லாட்சி, சங்க இலக்கியத்தில் பண்புடைமை, பண்புடையோர், பண்பிலாளன் போன்ற சொற்களில் உள்ளன. முன்தோன்றிய மூத்தக்குடியினராகிய தமிழின மக்கள் தோன்றியது தமிழகத்தில்தான். மனித இனம் தோற்றம் பெற்றது என்பது வரலாற்றறிஞர்களின் ஒருமித்தமுடிவு. ஆதிகாலத்தில் தோன்றி நாகரிக முதிர்ச்சியும், வாழ்க்கைப் பட்டறிவும் பெற்று பண்பாட்டில் தலைசிறந்தவர்களாக விளங்கியவர்கள் தமிழர்களே. எனவே நாகரிகம், பண்பாடு இவற்றை உலகுக்கு உணர்த்துவித்தும், பயிற்றுவித்தும் வந்த இனம் தமிழினமே என்பதை உணரலாம். அத்தகைய தமிழினத்திற்கென்றே சில தனிச்சிறப்புகள் தனிப்பண்புகள் உள்ளன.

நமக்கு இன்று கிடைக்கும் பழமையான நூல்கள் எனக் கருதக்கூடியன தொல்காப்பியமும் சங்க இலக்கியமும் ஆகும். இது அகம்-புறம் எனப் பகுக்கப்பட்டுள்ளது. தொல்காப்பியம் எவ்வாறு தமிழர்களின் வாழ்வியலைச் சொல்லியதோ அதேபோல் தொகை

மேலும், பண்பாட்டு மரபியல் என்பது மக்களின் வாழ்க்கை ஒழுகலாறுகளைக் குறிப்பது என்ற கருத்து நிலவுவதைக்காணலாம். மக்களின் பாரம்பரிய பழக்க வழக்கங்களையும், சடங்குகளையும் உட்கொண்டதாய் அமைவது பண்பாடு எனலாம். தொகை நூல்கள் பண்டைய மக்களின் பண்பாடுகளைத் தனது பாட்டிலக்கியத்தின் வழி பதித்துள்ளது. சிறந்த பண்பாட்டினைப் பின்பற்றி மக்கள் தங்கள் வாழ்ககையில் உயர்ந்த குறிக்கோளை எய்துவதற்குப் பண்பாடு ஒரு சிறந்த களமாக அமைகிறது எனலாம். பண்டைய மக்களின் பண்பாட்டினைச் சீர்தூக்கி இன்றைய பண்பாட்டு மரபியல் எவ்வாறு தொகை நூல்களோடு பொருந்திச் செல்கிறது என்பதையும் பண்பாட்டின் மரபுகளின் இன்றைய நிலையினையும் பற்றி ஆராய்வதே இவ்வாய்வின் நோக்கமாகும்.

## பண்பாட்டு மரபியல்

தமிழர் பண்பாடு, மொழி, இலக்கியம், இசை, நடனம், நாட்டுப்புறக்கலை, தற்காப்புக் கலை, ஓவியம், சிற்பம், கட்டிடக்கலை, விளையாட்டு, ஊடகங்கள், நகைச்சுவை, உணவு, ஆடைகள், கொண்டாட்டங்கள், தத்துவம், மதங்கள், மரபுகள் ஆகியவை வெளிப்படுபவையாக விளங்கும்.

தமிழர் பண்பாடு பல காலமாக பேணப்பட்ட, திருத்தப்பட்ட, மேம்படுத்தப்பட்ட அம்சங்களைக் குறித்து நின்றாலும், அது தொடர் மாற்றத்துக்கு உட்பட்டு நிற்கும் ஒரு இயங்கியல் பண்பாடே ஆகும். இயங்கியல் பண்பாடு என்பது அன்று முதல் இன்று வரை எவ்வாறு மக்களிடம் ஊடுருவி நிற்கிறது என்பதை விளக்குகிறது.

பாவாணர் கூறுவதுபோல, பண்பாடு என்பது திருந்திய ஒழுக்கம், நாகரிகம், என்பது திருந்திய வாழ்க்கை. முன்னது 'அகக்கூறு' பின்னது 'புறக்கூறு' நாகரிகம் சேர்ந்த பண்பாடுண்டு, நாகரிகம் இல்லாத பண்பாடுமுண்டு. தமிழர் பண்பாடு இவ்விரண்டிலும் மெச்சத்தக்கது என்பதை அறியலாம்.

ஆகவே, பண்பாட்டு மரபியல் என்பது இலக்கியங்களில் எவ்வாறு கையாளப்பட்டுள்ளது என்பதனையும் காணமுடிகிறது. "பண்பு, பாடு எனப்பிரிக்கும் வகையில் அமையும் இச்சொற்கூட்டில் சான்றாண்மை அல்லது உயர்ந்த செம்மையான உள்ளம் என்பது முதற்சொல்லின் பொருளாக அமைகின்றது. 'படு என்ற சொல்லின் பொருளே பாடு என்று வந்துள்ளது'. 'படு என்பதற்கு ஒழுகுதல் செல்லுதல் எனப் பொருள்படும். ஆகவே 'பண்பாடு என்பது 'பண்படு என்ற சொல்லின் மாற்றமே'. இது சான்றாண்மை ஆகிய ஒழுக்கம் அல்லது உயர்ந்த வழிச் செல்லுதல் என்னும் பொருள் விரிவை தன்னகத்தே கொண்டு நிற்கும். சான்றாக,

"யாதும் ஊரே யாவரும் கேளிர்"

என்ற கூற்றிலே பண்பாடு புலப்படும் (Avvai Duraisamy pillai, 2008). பண்பாடு என்பது பிறர் நலம் காணுதலிலும் புலப்படும் என்பதை அறியலாம். ஒரு நாட்டின் பண்பைய உணர்த்தும் வகையில் இவ்வரியானது அமையப்பெற்றுள்ளது. இது பண்பாட்டின் வெளிப்பாடு ஆகும்.

## பண்பாட்டின் தெளிந்த பொருள்

"பண்பெனப்படுவது பாடறிந்தொழுகுதல்"

மேற்கண்ட அடியின் வாயிலாகப் பண்பின் தெளிந்த பொருளைத் தெளியலாம் (Avvai Duraisamy pillai, 2008). திருவள்ளுவர் நாகரிகம் என்ற சொல்லையும் பயன்படுத்துகின்றார்.

"பெயக்கண்டும் நஞ்சுண் டமைவர் நயத்தக்க

நாகரிகம் வேண்டு பவர்"

நற்றிணையும் மேற்கண்ட குறள் கருத்தோடு இணைந்த கருத்து ஒன்று உளது (Kalyanasundaram, 1997).

"முந்தை யிருந்து நட்டோர் கொடுப்பின்

நஞ்சும் உண்பர் நனிநா கரிகர்"

எனவரும் அவ்வரிகளின் பொருளாக உள்ளே பொதிந்திருக்கும் கருத்துக்களை ஆழ்ந்து நோக்கின், பண்பாட்டைக் குறிக்கும் வேற்றுச்சொல் வடிவமே இந்நாகரிகம் என்பது நனி விளங்கும் (Avvai Duraisamy pillai, 2008).

இன்றைய சூழலில் 'பண்பாடு' என்பது உள்ளத்தின் வளர்ச்சியை அடிப்படையாகக் கொண்டது என்றும், 'நாகரிகம்' என்பது நடையுடை முதலிய புறத்தோற்றத்தை அடிப்படையாகக் கொண்டது எனலாம். ஆனால் இலக்கியத்தில் அவ்வாறு பதிவு செய்யப்படவில்லை.

## புறத்தில் அறப்பண்பாடு

தமிழர்தம் வாழ்க்கையை அகம்புறம் என பிரித்துக் கொண்டுள்ளார்கள். நிலத்தை ஐவகையாகவும், காற்றை நான்காகவும், மொழியை மூன்றாககவும், வாழ்வியலை அகம் புறம் என இரண்டாகவும் ஒழுக்கமேம்பாட்டில் அறம் சிறந்த ஒழுக்கத்தை முதலாகக் கொண்டு அறம் எனும் கொள்கை மீதே வாழ்க்கை நடத்தவேண்டும் என்ற வழியில் வாழ்ந்தவர்கள்.

"அறனும் பொருளும் இன்பமும் மூன்றும்

ஆற்றும் பெருமநின் செல்வம்

ஆற்றா மைநிற் போற்றா மையே"

பொருளின் பயன் அறம் செய்வதாகும் (Avvai Duraisamy pillai, 2008). அறமில்லாத வாழ்க்கை, மறுபிறவியில் நற்பேறு கிட்டாது என்பதைப் புலப்படுத்துகிறது.

வீரத்திலும் சிறப்பு பெறும் போர் நெறியினைச் சுட்டிக்காட்டுவது முக்கியமானதாகும். தமிழர்தம் நெறியில் தவறாது அறத்தினைச் செம்மையாக ஓம்பிய திறம் போற்றத்தக்கது.

"ஆவும் ஆனியற் பார்ப்பன மக்களும்

பெண்டிரும் பிணியுடையீரும் பேணித்

தென்புல வாழ்நர்க்கு அருங்கட னிறுக்கும்

பொன்போற் புதல்வர்ப் பெறாஅ தீரும்

எம்மம்பு கடிவிடுது நும்மரண் சேர்மினென

அறத்தாறு நுவலும் பூட்கை மறத்திற்"

என்ற பாடல் வரிகள் பண்டைத்தமிழர் போர் நெறியில் மேற்கொண்ட அறச்செயலைப் புலப்படுத்துகிறது (Avvai Duraisamy pillai, 2008). பகைவரை அழிக்கத் தொடங்குவதற்கு முன்பாக அவ்வூரில் உள்ள பசு முதலியவற்றை அப்புறப்படுத்தியதன் பின்னரே எரியூட்டுதல், அழித்தல் போன்ற செயல்களைச் செய்துள்ளனர். போர் வெறியிலும் அறநெறியைக் கடைபிடித்து பசு, பார்ப்பனர், பெண்டிர், பிணியில் சிக்குண்டோர் ஆகியோர் நீக்கப்பட்டபிறகு, அறத்தில் மண்டிய மறப்போரை வேந்தர்தம் நெறிபிறழாது இருந்தமையைப் புறநானூறு காட்டுகிறது.

தமிழ் மக்கள் மிகப்பெரிய பண்பாட்டுக்குச் சொந்தக்காரர்கள். தன்னலம் கருதாமல் பிறர்நலம் நாடிக் காலமெல்லாம் வாழ்ந்தவர்கள் தமிழ்மக்கள். 'தேவாமிர்தம் கிடைத்தாலும் இனியது' என்று அதைத்தான்மட்டுமே உண்ணமாட்டார்கள். யாரிடமும் வெறுப்புக் கொள்ளமாட்டார்கள். பிறர் அஞ்சும் துன்பத்திற்காகத்தாமும் அஞ்சி உறக்கம் இல்லாமல் வருந்துவர். புகழ் என்றால் அதைப் பெறுவதற்காகத்தனது உயிரையும் கொடுப்பார்கள். பழி வருவதானால் உலகம் முழுவதும் பெறுவதாக இருந்தாலும் ஏற்றுக் கொள்ளமாட்டார்கள். சோர்வு அடையமாட்டார்கள். அத்தகைய மக்கள் உயர்வு தாழ்வின்றி சங்ககாலத்தில் வாழ்ந்ததாகப் புறநானூறு தமிழினத்தின் பெருமையைச் செப்புகிறது.

"உண்டால் அம்ம இவ்வுலகம் இந்திரர்

அமிழ்தம் இயைவ தாயினும் இனிதுஎனத்

தமியர் உண்டலும் இலரே முனிவிலர்

துஞ்சலும் இலர்பிறர் அஞ்சுவது அஞ்சிப்

புகழ்எனின் உயிரும் கொடுக்குவர் பழியெனின்

உலகுடன் பெறினும் கொள்ளலர் அயர்விலர்

அன்ன மாட்சி அனையர் ஆகித்

தமக்கென முயலா நோன்தாள்

பிறர்க்கென முயலுநர் உண்மை யானே"

இவ்வாறு யாவர்க்கும் பொதுவான வாழ்க்கை இயல்புகள் அனைத்தும் இலக்கியங்களில் சொல்லப்பட்டு இருக்கின்றன. ஆக்கமும், ஊக்கமும் கொடுத்து தமிழ்நாட்டின் வளமையைப் பேணிக்காப்பதுதான் கடமையாக இருந்துள்ளமை புலனாகிறது (Avvai Duraisamy pillai, 2008).

'யாதும் ஊரே யாவரும் கேளிர்' எனக் கூறிய கணியன்பூங்குன்றனாரின் பழம் பாட்டும் பண்டைத் தமிழனின் வாழ்வியலைப் பாருக்குப் பறைசாற்றும். நிலத்தின் அடிப்படையில் அமைந்த ஒன்றே மக்கட்பிரிவு. குரவர், ஆயர், உழவர், பரதவர் முதலிய பெயர்களில் அந்நிலங்களின் அடிப்படையில் தமிழன் தன்னைப் பகுத்துக்கொண்டான். புற வாழ்க்கையில் தமிழன் தனக்கென தனியிடத்தை வகுத்துக்கொண்டு செம்மையுற வாழ்ந்து வந்துள்ளான் என்பது இலக்கியங்களின் வழிப்புனலாகிறது.

## அகப்பண்பாட்டு மரபியல்

அகத்தளவில், மனத்தளவில் மனிதன் மேற்கொள்ளவேண்டிய சமுதாயத்தோடு ஒழுகவேண்டிய பண்புகள் அகப்பண்பாடு எனப்படும். ஒவ்வொரு தனிமனிதனும் பின்பற்ற வேண்டிய ஒழுக்க நெறிமுறைகளை உலக ஒழுக்கத்தைப்பின்பற்றி நடக்க வேண்டிய அகப்பண்பாடாகும். புறப்பண்பாட்டினைவிட அகப்பண்பாட்டைப் பேணுவது கடினமானதொன்றாகும். அதே நேரம் போற்றத்தக்கதாகும். மனிதன் என்பவன் எத்தகைய குணங்களைப் பெற்றிருந்தால் ஒருவன் மனிதனாகிறான் என்பதை கலித்தொகை,

"ஆற்றுதல் என்பதொன்றலர்ந்தவர்க் குதவுதல்

போற்றுதல் என்பது புணர்ந்தாரைப் பிரியாமை"

என்று ஆற்றுதல், போற்றுதல், பண்பு, அன்பு, அறிவு, செறிவு, நிறை, பொறை ஆகிய பண்புகளை விளக்கிக்காட்டுகிறது (Subramanian, 2012). இத்தகைய நற்பண்புகளை உடைய சான்றோரே பண்புடையவர் எனப்படுவர். உலகம் அவ்வுயர்ந்தோர்களாலேயே நிலை பெற்றுள்ளது என்பதால்,

"பண்புடையார்ப் பட்டுண்டு உலகம்"

என்று வள்ளுவர் கூறுவார். சான்றோர்ச் சென்ற செந்நெறியில் வாழ்தலே பண்பாடாகும் (Kalyanasundaram, 1997).

தொகை நூல்கள் எல்லாம் பெரும்பாலும் இல்லற வாழ்வையே ஏற்றமுடையதாகக் கூறுகின்றன. இல்லறம் இனிதாக நடைபெறவேண்டுமென்றால், தலைவனும், தலைவியும் கருத்தொருமித்தவர்களாக வாழவேண்டும் தலைவன் வறுமையுற்ற போதும் தலைவனைப் பிரிந்து வாழாத நிலையையே தலைவியர் விரும்பினர். இல்வாழ்க்கை என்பதே இருக்கின்ற நாட்களெல்லாம் இல்லத்தே இருந்து ஒரே ஆடையை உடுத்திக்கொண்டு இருப்பினும் பிரியாதிருப்பவரின் வாழ்க்கை எத்தகையது என்பதனை,

"ஒன்றன் கூறு ஆடை உடுப்பவரே ஆயினும்

ஒன்றினார் வாழ்க்கையே வாழ்க்கை அரிதுஅரோ

சென்ற இளமை தரற்கு"

என்ற பாடலில் அழகாக தலைவித்தலைவனை உயிராகப் போற்றி வாழும் பண்பாட்டினை அறியமுடிகின்றது (Subramanian, 2008).

விருந்தோம்பல் பண்பு நம் தமிழருக்கு உரிய சிறந்தப் பண்பாகும். புற இலக்கியங்கள் நம் விருந்தோம்பல் பண்பைக் குறிப்பிட்டுள்ளன. தமிழருக்கே உரிய உலகம் போற்றும் இந்தப் பண்பைத் தமிழக மக்கள் பழங்காலம் முதல் பின்பற்றி வருகின்றனர்.

யாரென்று தெரியவில்லை எனினும் தண்ணீர் வேண்டும் என்று குரல் கேட்டவுடன் தங்க கலயத்தில் நீர்கொண்டுவந்து கொடுப்பதாக இலக்கியங்கள் பறைசாற்றுகிறது. இவற்றிலிருந்து உபசரிக்கும் பண்பாடு புலனாகிறது.

## களவியலில் மரபுக்கூறுகள்

"கொடுப்பாரும் கேட்பாருமின்றித் தலைமகனும், தலைவியும் தாமே தனியிடத்தில் எதிர்பட்டு காதல் வயப்பட்டுக்கூடுவது. இதனை யாழோர் கூட்டம் என்பர். தமிழில் வானுலகக் கந்தருவர் யாழை எப்போதும் கையிலேந்திய இசை வல்ல இன்ப மாந்தர் என்பது ஒரு கற்பனை.

தமிழ் மக்களது அன்பின் ஐந்திணை ஒழுகலாறாகிய களவொழுக்கம் உணர்த்தியமையால் இது களவியல் என்று பெயர் பெற்றது எனலாம் இக்களவியல் மரபுக் கூறுகளும் அதிகமாக இலக்கண இலக்கியங்களில் மிகுந்துள்ளதையும் அறியமுடிகின்றது. களவில் நிகழும் காட்சிகளாகத் தொல்காப்பியம் கீழ்க்கண்டவற்றைக் குறிப்பிடுகிறது.

"வேட்கை ஒருதலை உள்ளுதல் மெலிதல்

ஆக்கம் செப்பல் நாணுவரை இறத்தல்

நோக்குவ எல்லாம் அவையே போறல்

மறத்தல் மயக்கம் சாக்காடு என்றுஅச்

சிறப்புடை மரபினவை களவு என மொழிப"

தலைவன் தலைவி கூடும் போதோ அல்லது தனித்திருக்கும் போதோ மேற்கண்ட காட்சிகள் நடைபெறும் என்று களவியலில்கூட பண்பாட்டு மரபுகளைக் கடைபிடித்தவன் தமிழன் என்பதனை உணரலாம் (Subramanian, 2012). அதை,

"ஒருநாள் விழுமம் உறினும் வழிநாள்

வாழ்குவள் அல்லள் என்தோழி"

வலிமையான முதலைகளும், கற்பாறைகளும், நீர்ச்சுழிகளும் உடைய காட்டாற்று வெள்ளம் கொண்ட காட்டின் வழியே கடந்து இரவில் வருகின்றாய் என் தோழியாகிய தலைவி நீ ஒருநாள் வராவிடினும் அவள் உயிர் வாழமாட்டாள் என்று தோழி தலைவனுக்குக் கூறும் செய்தியிலிருந்து தலைவன் விரைவில் வந்து எம்மை சேராததால் உயிர்விடத்துணியும் தலைவியின் காதல் நமக்கு புலனாகிறது (Kandhaiyaa, 2008). தனக்கென தனி பண்பாட்டு மரபுகளை வைத்துக்கொண்டவன் தமிழன் என்பது புலனாகிறது. களவியலிலும் பண்பாட்டு மரபுகளைத் தமிழன் கடைபிடித்து வாழ்ந்தமை சாலச் சிறந்த ஒன்றாகும்.

## அறச்சிறப்பு

தொகைநூல்கள் பழந்தமிழரின் வாழ்வை சிறப்பாகத் தெளிவுப்படுத்துகின்றன. வாழ்வில் நன்மையும் தீமையும் கலந்தே அமையும். உயர்வும் தாழ்வும் அமைவது இயல்பு. ஒருவரை ஒருவர்

போற்றிப் புகழ்வதும், இகழ்ந்து பேசுவதும் இயற்கையே. மனித வாழ்வு அரிதிலும் அரிது. கிடைத்த அந்த வாழ்க்கையினை நாம் பயனுள்ள விதமாக அமைத்துக்கொள்ளவேண்டும்.

இந்த உலகு இயல்பு எத்தகையது எனில்,

"உண்கடன் வழி மொழிந்து இரக்குங்கால் முகனும், தாம்

கொண்டது கொடுக்குங்கால் முகனும், வேறாகுதல்

பண்டும்இவ் உலகத்து இயற்கை அஃது இன்றும்

புதுவது அன்றே"

ஈதல் என்னும் சொல்லிற்குக் கொடுத்தல், இடுதல், அருளல், உதவுதல், படிப்பித்தல் என்னும் பல பொருள்கள் கூறப்படுகிறது (Subramanian, 2008). ஈகையும் இன்றளவும் நன்னெறியில் இருக்ககாரணம் தனக்கென வாழாமல் பிற உயிர்களின் இன்பத்திற்காக வாழ்ந்து துயர் துடைக்கும் நல்லவர்கள் வாழ்தலினாலே ஆகும். பொருளில்லார்க்கு இவ்வுலகம் இல்லை என்பது ஆன்றோர் வாக்கு. பொருள் ஈட்டினால் மட்டும் போதுமா? இல்லை அதை பொருளில்லாத வறியவர்களுக்குக் கொடுத்து உதவுதலும் வேண்டும் அதனால் தான் ஈகை கைம்மாறு கருதாதச் சிறப்பினை உடையதாக இருக்கவேண்டும். கடையெழு வள்ளல்களில் ஒருவனாகிய பாரி அத்தன்மையன் என்பதை உணர்த்துகிறது.

சங்ககாலத் தமிழர்கள் நட்பினை பெரிதும் மதித்து வாழ்ந்தனர். நட்பு அனுபவபூர்வமானது யாராலும் எளிதில் உடைத்துவிடமுடியாதவாறு தொடமுடியாதவாறு மிக உயரியதாக இருக்கவேண்டும். தம் மனதில் தோன்றிய நட்பினை உயரியதாகக் கொண்டு நம்பிக்கை உடையவர்களாக நட்பு கொண்டவர்கள் இருக்கவேண்டும். திருவள்ளுவரும் உண்மையான நட்புக்கு இலக்கணம் கூறியுள்ளார் என்பதையும் அறியலாம். மேலும், "நெஞ்சத்து அகநக நட்பது நட்பு "என்று வள்ளுவர் கூறுவது, மனம் மகிழ்ந்து உள்ளன்புடன் நட்பு கொள்வதே உண்மையான நட்பாகும் என்கிறார். நிலத்தின் அகலத்தைவிட நட்பு மிகப்பெரியது. வானம் பொய்த்தால் நிலம் பயன்தராமல் போகலாம். ஆனால் நட்பு அத்தகையதன்று எல்லாக் காலத்திலும் பயன்பட்டு பின்னரும் தொடர்ந்து வரும் சிறப்புடையதாகும்.

## அடைக்கலம் போற்றல்

தன்னை அடைக்கலமாகக் காத்தல் சால்பும் செம்மையும் கொண்ட சான்றோரின் செயலாகும். பொருள் தேடும் முயற்சியில் ஈடுபட்ட தலைவனின் குறிப்பறிந்த தோழி உலகியல் நெறியுணர்த்தி அவனை விலக்குகிறாள். உலகம் உருவான காலம் முதலாகப் பொருளீட்டி வாழவிரும்புவோர் தம்மை அடைக்கலம் புகுந்தாரைக் காக்கவேண்டும் என்பது அறநெறி. இந்த அறநெறியைத் தலைவர் மறந்தனரோ என்று தோழி அறம் உரைக்கின்றாள்.

"இன்னா செயினு மினிதுதலை யளிப்பினும்

நின் வரைப்பினள், என் தோழி"

என்று தலைவியை ஓம்படுத்துகிறாள் (Subramanian, 2010). மேலும் இளமையில் உள்ள அன்பு முதுமையிலும் தொடர்ந்து வருதல் வேண்டும் என்பதை,

"நன்னெடுங் கூந்தல் நரையொடு முடிப்பினும்

நீத்த லோம்புமதி பூக்கேழ் ஊரே"

என்று அறிவுறுத்துகிறாள் (Avvai Duraisamy pillai, 2010). பறவை விலங்குகளின் வாழ்வை விளக்குவதன்மூலமும் இவ்வறம் பற்றிய கருத்துக்கள் எடுத்துரைக்கப் பெற்றுள்ளன. பாலையின் வெம்மையால் வாடும் பெடையின் வருத்தத்தை நீக்குவதற்குத்தன் மென்சிறகால் பசியாற்றும் புறாவின் செயலும், கலங்கிக்கிடக்கும் சின்னீரைப் பிடியூட்டிப் பின்னுண்ணும் பெருங்களிற்றின் அன்பும்,

நிழலின்மையால் வருந்தும் பெண்மானுக்கு தன்னிழலைக் கொடுத்தளிக்கும் கலைமானின் அருள்திறமும் தலைவியைப் பிரியாது வாழவேண்டிய இல்லறத்திறன் சிறப்பினை வலியுறுத்துகின்றன.

தன்னை அடைக்கலமாக அடைந்த புறாவின் உயிரைக் காத்தற்பொருட்டு தன் தசையை அறுத்துக் கொடுத்தும் அதற்கு ஈடாகாத நிலையில் தானே துலைத்தட்டில் ஏறியவன் சிபியென்னும் மாமன்னன் சிபியின் அருள்திறம் இவ்வறத்தினைத் தெளிவாக விளக்குகிறது. பகைவனின் குணத்தையும் சீர்தூக்கிப் பார்க்கும் தன்மையுடையதாகப் பதிவு செய்து இருப்பது சாலச் சிறந்ததாக விளங்குகின்றன.

## பகுத்துண்ணும் பண்பாட்டு மரபியல்

பாரோர் போற்றும் சிறந்த அறங்களுள் ஒன்று பகுத்துண்ணல். அறநூலோர் தொகுத்துரைத்த அறங்களுள் தலைமைச் சான்றதும் அதுவே,

“பகுத்துண்டு பல்லுயி ரோம்புதல் நூலோர்

தொகுத்தவற்று ளெல்லாம் தலை”

என்பார் வள்ளுவர் (Kalyanasundaram, 1997). கிடைத்தற்கரிய பொருளாயினும் பிறர்க்குக் கொடுக்காது தனித்து உண்ணுதல் தகுதியுடைய செயல் ஆகாது என்று உணர்த்துகிறது.

நம்மிடம் உள்ளதைக்கொண்டு பிறர்க்கு நன்மை செய்து வாழ்தல் வேண்டும் என்ற கருத்தை வலியுறுத்துகின்றது. வறுமையில் வாடிய புலவர் பெருமக்களும் வள்ளல்களிடம் தாம்பெற்ற பரிசில் பொருளை,

“பெற்றது மகிழ்ந்து சுற்ற மருத்தி

ஓம்பாது உண்டு கூம்பாது வீசி”

என்ற பாடல் அடிகளானது வாழும் இயல்பினராகத் திகழ்ந்ததைக் கோவூர்க்கிழாரின் பாடல் அறிவிக்கின்றது (Avvai Duraisamy pillai, 2008). குமணனிடம் தாம் பெற்ற பரிசில் பொருளை,

“நின்னயந் துறைநர்க்கு நீநயந் துறைநர்க்கும்

பன்மாண் கற்பினின் கிளைமுத லோர்க்கும்

கடும்பின் கடும்பசி தீர யாழநின்

நெடுங்குறி யெதிர்ப்பை நல்கி யோர்க்கும்

இன்னோர்க் கென்னா தென்னொடுஞ் சூழாது

வல்லாங்கு வாழ்து மென்னாது நீயும்

எல்லோர்க்கும் கொடுமதி மனைகிழவோயே”

என்னும் பெருஞ்சித்திரனாரின் பாடல் பொருளைப் பகுத்துண்டு வாழும் பண்பாற்றலை வெளிப்படுத்துகின்றது (Avvai Duraisamy pillai, 2008). பிறரோடு பகிர்ந்துண்டு வாழ்வதற்குகென்றே பலவற்றையும் தொகுக்கும் முயற்சியில் ஈடுபடுதலே ஆண்மை எனக்கருதிச் சங்கத்தமிழர் வாழ்ந்தனர் இதனை,

“பகுத்தூண் டொகுத்த வாண்மை”

என்று பதிற்றுப்பத்து கூறுகின்றது (Avvai Duraisamy pillai, 2012). தம்மிடம் உள்ளவற்றைப் பகுத்துண்டு வாழும் பண்புடையராகப் புரவலரும் விளங்கினர் என்பதை உணர்த்துகின்றன.

“செந்நீர்ப் பொதுவினை செம்மல் மூதூர்த்

தமதுசெய் வாழ்க்கையின் இனிய துண்டோ”

என்று பகுத்துண்டு வாழும் சிறப்பு புகழப்பெற்றது (Avvai Duraisamy pillai, 2010). மலையமான் திருமுடிக்காரியன் மக்கள் குறித்துக் கோவூர்க்கிழார்,

"இவரே புலனுழு துண்மார் புன்கணஞ்சித்

தமது பகுத்துண்ணுந் தண்ணிழல் வாழ்நர்"

என்று பகுத்தளிக்கும் அவன் அருட்பண்பினைக் குறிப்பிட்டுள்ளார் (Avvai Duraisamy pillai, 2008). பகுத்துண்ணும் பண்பாட்டு மரபியல் தொகை நூல்களில் விரவிக் காணக்கிடப்பதை அறியலாம். அன்றைய காலத்தமிழரின் வாழ்வு அறவாழ்வு என்ற பண்பாட்டு மரபியலை அறியமுடிகின்றது.

## வறுமையிலும் செம்மையான உயர்பண்பு

தொகைநூல்கள் தமிழர் தம் குடும்ப வாழ்வுபற்றி மிகவும் உயர்ந்த கொள்கைகளைக் கொண்டிருந்தனர். தலைவி புகுந்த மனைவறுமை அடைந்தவிடத்தும் பிறந்த வீட்டு உதவியை நாடாத தலைவியின் அறிவும் ஒழுக்கமும் பெரிதும் வியப்புக்குரிய ஒன்றாகும்.

"கொண்ட கொழுநன் குடிவறனுற்றெனக்

கொடுத்த தந்தை கொழுஞ் சோறுள்ளார்

ஒழுகுநீர் நுணங்கு அறல் போலப்

பொதுழு மறுத்துண்ணும் சிறுமதுகையளே"

எனும் வரிகள் தன்னை மணந்த கணவரின் குடும்பம் வறுமையுற்றது (Avvai Duraisamy pillai, 2010). நீரோடு கிடைக்கும் எளிய கஞ்சியைப்போல் மாறி வாழ்க்கை அடைந்துவிட்டாள். அந்த நிலையிலும் ஒரு காலத்தில்அமுது போன்ற பால் சோற்றைப்பொற் கிண்ணத்திலிட்டு உண்டவள் இன்று கணவனுக்கேற்ப வாழுகிறாள் என்று கூறுகின்றன.

உலகம் போற்றும் உயர்பண்பினைச் சொல்லாலும் செயலாலும் அதனைத் தம் இனத்தவருக்கு கற்பிக்கவேண்டும். எல்லோருடைய இயல்புகளையும் அறிந்து மனமொற்றி நன்றியில் ஒழுகவேண்டும். இத்தகையோரைப் பண்பாடுடையார் என்கிறோம். தன்னலமே இல்லாமல் பிறர் நன்மையே நாம் என உழைக்கும் சான்றோர்கள் இருப்பதால்தான் இந்த உலகம் இருக்கின்றது என்று அவர்களின் உயர்ந்த பண்புகளை எடுத்துரைக்கின்றது.

தமிழ்நாட்டு மக்களும் புலவர்களும் மன்னர்களும் ஒற்றுமையைப் போற்றிக்காத்தனர் அவர்கள் சமயத்தால் வேறுபட்டிருந்தாலும் மனித நேயத்துடன் நட்புக் கொண்டிருந்தனர். இத்தகைய ஒருமைப்பாட்டுணர்வே தமிழகத்தின் தொன்மைப் புகழுள் ஒன்றாய் விளங்குவதை அறியலாம்.

## ஆளுமையில் பண்பாடு

ஆளுமை என்பது தனித்திறமையைக் குறிப்பிடுகிறது. திறமையை வெளிப்படுத்தி பிறரிலும் மேம்பட்டவர்களை ஆளுமைத்திறன் வாய்ந்தவர்களாகக் கருதப்படுகின்றனர். மண்ணையும, மன்னனையும் நெறிப்படுத்தி மக்களுக்கு அன்பையும் அறத்தையும் போதிக்கும் ஆளுமையைப் பெற்றவர்களாகப் புலவர்கள் விளங்கினார்கள்.

குழந்தையின் சிறப்பும், முதுமையின் இளமையும் அழகுணர்ச்சி ஆளுமையாகக் குறிப்பிடலாம். வீரதீரச் செயல்கள் புரிவது மட்டுமல்லாமல் பசிப்பிணி மருத்துவன் என்றுப் புலவர்கள் போற்றும் புகழை அரசியல் ஆளுமையில் மன்னர்கள் சிறந்து விளங்கியமை உணர்த்துகிறது.

பன்முக உத்திகளை வெளிப்படுத்திப் பொருளாதார ஆளுமை வளர்ச்சி அடைந்துள்ளதையும் உணரமுடிகின்றது. புகழும் மதிப்பும், வெற்றியும் அடைவதற்கான வழியை வகுத்து வாழ்ந்தமை சமூக

ஆளுமையைக் குறிப்பிடுகிறது. புலவர்கள் மன்னர்களைப் புகழ சமய ஆளுமையை வெளிப்படுத்திப் பாடியுள்ளதையும் இலக்கியங்கள் உணர்த்துகின்றன.

"பீடின் மன்னர்ப் புகழ்ச்சி வேண்டிச்

செய்யா கூறிக் கிளத்தல்

எய்யாதாகின்று, எம்சிறு செந்நாவே"

என்ற வரிகளின் வாயிலாக புலவர்கள், மன்னர்கள் ஆகியோர்களின் ஆளுமையில் பண்பாடு வெளிப்படுவதைக் காணலாம். எதை வேண்டுமானாலும் செய்யலாம் என்பதனைவிட இதைத்தான் செய்யவேண்டும் என்ற கொள்கையினைக் கொண்டவர்கள் தமிழர்கள் (Avvai Duraisamy pillai, 2008).

## வணிகத்தில் பண்பாண்பாட்டு மரபியல்

குமுகாயத்தில் இன்றியமையா இடம் பெறுவனவற்றுள் ஒன்று வாணிகம். சமன்செய்து சீர் தூக்கும கோல்போல் அமைந்தொருபால் கோடாத வாணிக முறையினைக் காட்டுகின்றது. பண்டமாற்று முறையும் இருந்தது. வீட்டுக்கு வீடு என்றும் இல்லாமல் நாட்டுக்கு நாடு இவ்வித பண்டமாற்று முறையை அறியலாம்.

"நீரின் வந்த நிமிர்பரிப் புரவியும்

காலின் வந்தகருங்கறி மூடையும்

வடமலைப் பிறந்த மணியும் பொன்னும்"

நீரின் வந்த நிமிர் பரிப்புரவியும் காலின் வந்த கருங்கறி மூடையும் பிறந்த ஆரமும், மணியும், பொன்னும் முத்தும், குணகடல் துகிலும், கங்கை வாரியமும், காவிரிப் பயனும், கீழகத்துணவும், காழகத் தாக்கமும், அரியவும், பெரியவும் நெறியவந்தீண்டிய வாணிகத் துறையை நாளங்காடி அல்லங்காடி என்பன பற்றிசேர இளவலின் சிலம்புகாட்டும். கிரேக்கம், சீனம் முதலிய தொன்மையான நாகரிக நாடுகளுடன் வாணிகத்தொடர்பு கொண்டு சிறந்தமைக்குப் பல்வகைச் சான்றுகளுடன் பெருமை கொள்ளும் உரிமையுடையவன் தமிழன் என்று அறியலாம் (Avvai Duraisamy pillai, 2012).

இவ்வாறு வணிகத்திலும் நேர்மையினைக் கடைபிடித்து வாழ்ந்தனர். நம் முன்னோர்கள். கொடுப்பதும், குறைவுபடாது கொள்வதும் மிகைகொளாது வாழ்ந்து வந்தவர்கள் நம்முன்னோர்கள்.

## சமயப்பண்பாட்டு மரபியல்

உலகத்தின் சிறந்த கூறாகக் கருதப்படும் இயற்கை வழிபாட்டுச் சமயத்தைப் போற்றிய பெருமை தமிழனுக்கு உண்டு. மாயோன் மேய காடுறை உலகமும், சேயோன் மேய மைவரை உலகமும், வேந்தன் மேய தீம்புனல் உலகமும், வருணன் மேய பெருமணல் உலகமும் தமிழனுக்குச் சொந்தம். பண்டைத் தமிழர்தம் சமயக் கோட்பாட்டில் காழ்ப்பு இல்லை. கசப்பு இல்லை. சமணர், பௌத்தர் முதலிய வேற்றுச் சமயர் இடையீட்டால் அமைதியான இயற்கை வழிபாடு சிதைந்து "சமயநிலை" உருவாகியது எனினும் பண்பு நிலை பிறழாமையைக் காணமுடிந்தது.

சங்ககால மக்கள் இயற்கையோடு இயைந்த வாழ்க்கையே வாழ்ந்திருந்தனர். இயற்கையின்மீது கொண்டிருந்த அச்சம் காரணமாக இயற்கையின் மீதான வழிபாடு செய்யும் சிந்தனை மனிதனுக்கு ஏற்பட்டது. வழிபாடு செய்து ஆற்றுவித்தல் மூலம் அதன் சீற்றத்திலிருந்து தன்னைக் காத்துக் கொள்ளமுடியுமென்று எண்ணினர். சூரியன், மேகம், கடல் முதலான அச்சம் தரும் இயற்கையை அருவமாக வழிபாடு செய்யத்தொடங்கினர். நாளடைவில் உருவம் கொடுக்கப்பட்டது. மக்கள் வாழ்க்கையில் ஏற்பட்ட வழிபாட்டுச் சிந்தனை அக்கால இலக்கியங்களிலும் எதிரொலிக்கத்தொடங்கின.

சங்ககால மக்களிடம் வேரூன்றியிருந்த விரிச்சிகேட்டல், சகுனம் பார்த்தல், வேலன் வெறியாடல், குரவைக்கூத்து முதலிய இறை நம்பிக்கை தொடர்பான பழக்கவழக்கங்களை மேற்கொண்டிருந்தனர்.

எல்லா உயிர்க்கும் இன்பம் பொதுவாயினும் சிறந்த இன்பம் எது என அறிந்து, துய்த்தல் அஃறிணை உயிர்களுக்கு அன்றி, உயர்திணை உயிருக்கே இயல்வதாகும். ஆகவே மக்களினமே ஆராய்ந்தறிந்து அவா நீக்கி, இடையறா இன்பம் நல்கும் பேரா இயற்கையைப் பெறமுடியும்.

"ஆரா இயற்கை அவாநீப்பின் அந்நிலையே

பேரா இயற்கை தரும்"

என்று திருவள்ளுவரும் பாடியுள்ளார் (Kalyanasundaram, 1997). வாழ்வியல் முறையையும், பொய்தீர் ஒழுக்க நெறியையும் பின்பற்றி வாழ்வதே சிறந்தது. அந்நெறியுடன் சில சடங்கு முறைகளையும் சேர்த்துப் பின்னர் சமய வழிமுறைகளையும் அமைத்துக் கொண்டனர். மக்கள் தொடக்க காலத்திலே நிலநடுக்கம், வெள்ளம், தீ, புயற்காற்று, இடிமின்னல் முதலியவற்றால் வரும் துன்பங்களைக் கண்டு அஞ்சினர். அவற்றின் துன்பங்களிலிருந்து விடுபட இயற்கையை வழிபடத் தொடங்கினர். அவ்வாழிபாடு காலப்போக்கில் அன்பு வழிபாடாக மாறியது இதனை,

"எரியெள்ளு வண்ணநிறத்தன் விரியிணர்க்

கொன்றையும் பைந்தார கைத்தன் பொன்றார்"

என்று கூறுவதைக் காணலாம் பெரிதும், மதித்து அவர்களின் பெயரையும், மறச் செயல்களையும் கல்லிற் பொறித்து நட்டு, மாலை சூட்டிப் படையலிட்டு மக்கள் வழிபட்டனர் (Avvai Duraisamy pillai, 2012).

வீரப்போர் செய்த களத்தில் வீழ்ந்த வீரனுக்கு நடுகல் நடும்போது, நல்ல உறுதியான கல்லைக் கண்டு எடுத்து வருதலும், கல்லை நீராட்டிக் குறித்த இடத்திலே நடுதலும், அக்கற்களில் வீரனுடைய பெயரும் புகழும் குறித்தலும், அவ்வீரனுடைய புகழினை வாழ்த்திப் போற்றுதலுமாகிய நிகழ்ச்சிகள் நடந்தன.

"நுழைநுதி நெடுவேல் குறும்படை மழவர்

முனையாத் தந்து முரப்பின் வீழ்த்த

வில்லேர் வாழ்க்கை விழுத்தொடை மறவர்

வல்லாண் பதுக்கைக் கடவுட் பேண்மார்

நடுகற்பீலி சூட்டித் துடிப்படுத்துத்

தோப்பிக் கள்ளொடு துரூஉப்பலி கொடுக்கும்

போக்கருங் கவலைய புலவுநா றருஞ்சுரம்"

நடுகல்லுக்கு மயிற்பீலி சூட்டித் துடியை ஒலித்துப்போர் வீரர்களுக்கு உணவைவிட உகந்ததாகிய ஆட்டுக்குட்டியைப் பலிகொடுத்து இறந்த வீரனைப் போற்றுவர் எனக் கூறுகிறது (Kandhaiyaa, 2008).

மரம், செடி, கொடி, மலர், மண்டிக்கிடக்கும் தூர்களிலும், தெய்வம் உறைந்துள்ளது என உணர்ந்ததால் அதன்மீது அன்பு செலுத்திப் பெருமதிப்பும் உயரிய நம்பிக்கையும் கொண்டு வழிபட்டனர். உலக உயிர்கள் தோன்றிய காலம் முதலே அன்பும் பக்தியும் உலக இயக்கத்திற்கு அடிப்படையாக அமைந்திருக்கும்.

சங்ககால மக்கள் இயற்கையோடு இயைந்த கேண்மையினர். அவர்கள் இயற்கையோடு போராடவேண்டிய சூழ்நிலையில் தோல்வியுற்றபோது தன்னிலும் மேலான ஒன்று இவ்வுலகில் உள்ளது என்று நம்பி, அதனை கடவுளாக வழிபட்டனர். இந்த நம்பிக்கையே அவர்களது வாழ்க்கையில் உயிர்நாடியாக இருந்தது. இதுமட்டுமன்றி, மக்கள் தம்மிடம் உள்ள விருப்பம் மற்றும் தேவைகளை நிறைவு செய்து கொள்ளவும் கடவுளை வழிபட்டனர்.

தாங்கள் செய்த வினைக்கு ஏற்ப நன்மையும் தீமையும் விளையும் எனச் சங்ககால மக்கள் நம்பினர். இத்தகைய வினைகளுக்குக் கடவுளே காரணம் எனக் கருதினர். கடவுளை வணங்காதவன் கொடியோன் எனவும், அவனைக் கடவுள் தண்டிப்பார் எனவும் நம்பினர்.

“மன்ற மரா அத்தபேஎ முதிர்கடவுள்

கொடியோர்த் தெறூஉம்”

என்று கூறுவதைக் காணலாம் (Subramanian, 2010).

## கல்வியில் பண்பாடு

சங்க காலத்தமிழர் கல்வியின் சிறப்பை நன்குணர்ந்திருந்தனர். கல்வி பயிலும் உரிமை சங்காலத்தில் தனிப்பட்ட ஒரு சிலரின் உரிமையாக இருந்ததில்லை. எக்குலத்தைச் சார்ந்தவர்களும், செல்வர்களும், வறியவர்களும் மன்னர்களும், ஆண்களும், பெண்களும் கல்வியைத் தேடிப் பெற்றனர். இளைஞர்கள் மணமான பின்னும் தங்கள் மனைவியைப் பிரிந்து சென்றும் கல்வி கற்பதுண்டு. ஈன்று புறந்தருதல் என் தலைக்கடனே, சான்றோனாக்குதல் தந்தைக்குக் கடனே என்று பெண்கள் கருதினர். ஒவ்வொரு ஊரிலும் கல்வி பயிற்றுவிக்கும் கணக்காயர் இருந்தார். கணக்காயர் இல்லாத ஊரும் நன்மை பயத்தல் இல. பள்ளிகள் பெரும்பாலும் திண்ணைகளிலேயே நடைபெற்றன. மாணவர்கள் எழுத்தாணியைக் கொண்டு ஓலையின் மேல் எழுதினர். மாணவர்கள் கல்வி பயிலும் போது இரந்துண்ணும் பழக்கம் இருந்துள்ளது. இது உயர்ந்த பண்பாடாக அப்போது கருதப்பட்டது.

உயரிய பண்பும் பெருமையும் சேர்க்கும், கல்வியினைத் தொகை நூல்களில் சிறப்பாகக் காணமுடிகிறது. எந்த ஒரு மனிதனும் பண்பாட்டுக் கூறுகளுடன் பிறப்பதில்லை. எனவே, கல்வியின் வாயிலாக பண்பாட்டுக் கூறுகளைக் கற்றுக்கொள்கிறான். அது இலக்கியங்களில் மட்டும் அடங்கியிருப்பதனைக் காணலாம். மேலும் கல்வி மட்டுமே ஒருவனை நல்வழிப்படுத்தக்கூடிய ஆயுதமாகும். கல்வியில் பண்பாட்டுக் கூறுகளை இன்றளவும் காணமுடிவதை அறியலாம்.

ஒருதாய் வயிற்றில் பிறந்த பலருள் எல்லோரிடமாக சமமாக அன்பு காட்டும் தாய்கூட தன் பிள்ளைகளில் நன்கு கற்றவனிடம் அதிக அன்பு காட்டுவாள். ஒரு குடும்பத்தில் பிறந்தபலருள் மூத்தோனை அழைக்காமல், கல்வியறிவுடைய இளையோன் வழியில் அரசும் இயங்கும். வேறுபாடுடைய நான்கு வருணத்துள், கீழ் வருணத்தான் கல்வி பெற்றிருப்பின், மேல் வருணத்தாரும் அவனைப் போற்றி மதிப்பர். ஆகவே கல்விச் சிறப்பால் தாயும் மனம் திரிகிறாள். அரசும் கற்றவன்வழிச் செல்கிறது. வருணவேறுபாடு மறைகிறது. ஆகையால், கல்வியின் இச்சிறப்புக்களை உணர்ந்து கற்கவேண்டும் என்பதை,

“ஒருகுடிப் பிறந்த பல்லோ ருள்ளும்

மூத்தோன் வருக என்னாது அவருள்

அறிவுடை யோனாறு அரசும் செல்லும்

வேற்றுமை தெரிந்த நாற்பாலுள்ளும்

கீழ்ப்பால் ஒருவன் கற்பின்

மேற்பால் ஒருவனும் அவன்கட் படுமே”

என்பதால் அறியலாம் (Avvai Duraisamy pillai, 2008).

உலகச் செல்வங்களில் கல்விச் செல்வம்தான் சிறந்தது. சிற்றுயிர்க்கு உற்ற துணையாக வருவது. கல்வி பெற்றவனைத் தாயும் அரசும் பாராட்டும் தன்மையைக் காணும் போது கல்வியின் மேன்மையை உணரமுடிகின்றது. கல்வியின் சிறப்பால்தான் அவ்வையும் தூதுபோனார் என்பதை அறியலாம்.

அதியமான், ஔவை நீண்ட நாட்கள் வாழவேண்டும் என்பதற்கு அரிய நெல்லிக்கனி தந்தான். கற்ற புலவர் தம்மைப் பாடாமல் போவது அரசர்க்குப் பழியாகும். ஆகவே தந்தை தன் மகனைக் கல்வி கற்ற சான்றோனாக்குதல் வேண்டும் என்று கூறுகிறது.

மக்களாகப் பிறந்தவர்கள் நாட்டிற்கு நன்மைகள் செய்யவேண்டும். அவர்களின் சிந்தனைகள், செயல்கள் உயர்ந்ததாக இருக்கவேண்டும். அதற்கு கல்வியின் அவசியத்தை உணர்ந்தும், கற்றுத்தெளிந்தால் மட்டுமே முடியும்.

## பண்பாட்டின் இன்றைய மரபுக்கூறுகள்-

இலக்கியங்களில் பண்பாட்டின் மரபுக்கூறுகளைக் காணும்போது இக்காலத்தில் அப்பண்புகள் உள்ளனவா? இல்லையா? என்ற கேள்வி எழக்கூடும். பண்பாடானது இன்றைய சூழலில் ஒவ்வொரு மனிதனுக்கும் தேவயையான ஒன்றாகும். நமது பண்பாட்டினை மறந்து வெவ்வேறு கோணங்களில் மனிதன் பயணித்துக் கொண்டு இருக்கின்றான். "தீதும் நன்றும் பிறர்தர வாரா" என்ற கூற்றுக்கு இணங்க, இன்றைய சூழலில் மனிதனுக்கு ஏற்படக்கூடிய இன்ப, துன்பங்களுக்கு முக்கியக் காரணமாக இருப்பதனை அறிய முடிகின்றது. இலக்கியம் கூறும் பண்பாட்டினை விட்டு மனிதன் வெகுதூரத்தில் பயணித்துக் கொண்டிருக்கிறான். சொல்லப்போனால் தனக்கான பாதையினை மறந்து கொண்டு பயணிக்கின்றான். தன்னிலை உணர்ந்து செயல்படத் தொடங்கவேண்டும். இல்லையெனில் தானும் அழிந்து சமுதாயத்தினையும் அழிவு பாதைக்குச் செலுத்திவிடுவான் என்பதனையும் உணரவேண்டும்.

முடிவாக இலக்கியங்கள் கூறும் பண்பாட்டினை மனிதன் முழுமையாகக் கடைபிடித்து ஒழுகினால் மட்டுமே இச்சமுதாயம் வளம்பெறும், வாழ்வுறும், இதனைக் கருத்தில் கொண்டு, பண்பாட்டின் மரபுக்கூறுகளை உடைத்தெறிவோம் என்ற மனப்போக்கில் இல்லாமல், கட்டமைப்பினுள் தங்களுடைய வாழ்வினை இக்கால மனிதர்கள் பின்பற்றவேண்டும். இல்லையெனில் மரபுகள் உடைத்து எறியபட்டால், வாழ்வு இனிமை பெறாது, துன்பமே மிஞ்சும் என்பதனை கருத்தில் கொண்டு வாழவேண்டும். ஏனெனில் நம்முன்னோர்கள் வாழ்ந்த கட்டமைப்பை வைத்துக் கொண்டு வளர்ச்சியை முன்னெடுப்போம், கட்டமைப்பை கட்டவிழாமல் காப்போம். இவ்வகையில் இலக்கியங்களின்வழி நிற்போம்.

## முடிவுரை

மனம் ஒத்த அன்பே இல்வாழ்க்கையின் அடிப்படைப் பண்பாக விளங்குவதைத் தொகை நூல்களின் வாயிலாக அறியமுடிகின்றது. அதற்கு பண்பாடு என்ற அடிப்படை இருந்தால் மட்டுமே சாத்தியமாகும் என்பதனை அறியமுடிகின்றது. அகப்பண்பாடு, புறப்பண்பாடு என்று அகத்திலும் சரி, புறத்திலும் சரி பண்பாட்டினை உயிரெனக்கருதி தமிழர்கள் வாழ்ந்துள்ளனர் என்பதனை அறியமுடிகின்றது. சங்ககாலத் தமிழர்கள் நட்பினை பெரிதும் மதித்து வாழ்ந்தனர். நட்பு அனுபவபூர்வமானது யாராலும் அதனை எளிதில் உடைத்துவிடமுடியாது என்பதனை பகிர்கின்றது. பகுத்துண்ணும் பண்பாட்டு மரபுக் கூறுகளையும் தொகை நூல்களில் கடமையாகக் கொண்டுள்ளனர். மேலும் விருந்தோம்பல் பண்பினை அறமாகக் கொண்டு வாழ்ந்தனர். ஆளுமை என்பது தனித்திறமையினை வெளிப்படுத்துகின்றது. இலக்கியங்களில் ஆளுமையின் வெளிப்பாடு எண்ணி வியக்கத்தக்கது எனலாம். வாணிபத்தில் கொண்ட அறமானது சொல்லிமாளாது. ஏனெனில் வாணிபத்தில் பண்பாட்டினை உயிரெனக்கருதி வாழ்ந்தனர். தொகை நூல்களில் சிறந்த கூறாகக் கருதப்படும் வழிபாட்டு முறைகளைக் காணும்போது பக்தியோடு அறவாழ்வையும் தமிழர்கள் வாழ்ந்து இருந்தமை நமக்குப் புலனாகின்றது. சமுதாயத்தை உயர்த்துதல் என்பது அறத்தின் நோக்கங்களுள் ஒன்று. பண்பாட்டின் வளர்ச்சியும் இதுவே என தொகை நூல்களின் வாயிலாக அறியலாம். தொகை நூலில் தமிழர் தங்களுடைய வாழ்வினையும், சடங்கு முறைகளையும் நேர்த்தியுடன் கடைப்பிடித்தனர் என்பதனை அறியமுடிகிறது. யாவர்க்கும் பொதுவான வாழ்க்கை இயல்புகள், பல்வேறு வகையான மனித வாழ்க்கைக்குத் தேவையான அனைத்துக் கருத்துக்களும் அடங்கியுள்ளன. இன்றைய இளைஞர்

சமுதாயத்திற்குத் தொகை நூல்கள் வாழ்க்கை நெறிகளை அறிந்து கொள்வதற்கு உதவுகின்றன. தொகை நூல்களின் வாயிலாக அனைத்து அறக் கருத்துகளையும் அறியமுடிகிறது. இப்பண்பாட்டுப் படிமங்களைப் பாரம்பரியங்களைக் காப்பது ஒவ்வொரு தமிழனின் கடமையாக இருக்கவேண்டும். நூல்களில் கூறியுள்ள பண்பாட்டு மரபுகளைக் கடைப்பிடிப்போம் வளமான வாழ்வை வாழ்வோம்.

## References


Avvai Duraisamy Pillai, S. (2008) Purananooru Moolam Uraiyum, Poompuhar Pathippagam, Chennai, India.

Avvai Duraisamy Pillai, S. (2010) Natrinnai Moolamum Velakauraiyum, Poompuhar Pathippagam, Chennai, India.

Avvai Duraisamy Pillai, S. (2012) Pathitrupathu, Poompuhar Pathippagam, Chennai, India.

Kalyanasundaram, T.V. (1997) Thirukural, Poompuhar Pathippagam, Chennai, India.

Kandhaiyaa, N.S. (2008) Aganaanooru Moolamum Uraiyum, New Century Book House, Chennai, India.

Subramanian, S.V. (2008) Kalithogai, Manivasagar Pathippagam, Coimbatore, India.

Subramanian, S.V. (2010) Kurunthogai moolamum uraiyum, Manivasagar Pathippagam, Coimbatore, India.

Subramanian, S.V. (2012) Tholkappiyam mollamum uraiyum, Manivasagar Pathippagam, Coimbatore, India.



**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.



**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License